
705
காற்றி
ஆசிரியர்: அம்பை
விலை
25
காசு

காஞ்சி

மலர் 1 13—6—65 இதழ் 44

காமராஜர், தமிழராக!!

நிலைமைகளை உருவாக்கும் திறன் படைத்தவர்கள் சிலர்; சிலர் உருவாக்கப்பட்ட நிலைமையைத் திறம்படப் பயன்படுத்திக்கொள்வர்; வேறுசிலர் உள்ளனர், உருவாக்கியுள்ள நிலைமையைக்கூடத் திறம்படப் பயன்படுத்திக்கொள்ளும் திறனற்றவர்கள். மரம் வளர்ப்பவர், கனிபறிப்பவர், மரமே பட்டுப் போகும்படி விட்டுவிடுபவர் என்று வகைப்படுத்தலாம் இம் மூன்று தரத்தினரை.

காமராஜர், நாமறிந்த வரையில், இரண்டாம் வகையினர்; உருவாகிடும் நிலைமைகளைத் திறமையுடன் பயன்படுத்திக்கொள்பவர். அரசியல் அரங்கிலே அவருடைய 'சாதனைகளை' நுணுகிப் பார்த்திடுவோருக்கு இது நன்கு புரியும். இந்தத் திறமை அலட்சியப்படுத்தத்தக்கதுமல்ல; இதற்காகக் காமராஜரைப் பாராட்டவும் நாம் தயங்கவில்லை.

ஆனால், இப்போது அவர் இந்தத் திறமையைச் செயல்படுத்தாது, இருப்பது கண்டு உள்ளபடி வருத்தப்படவேண்டி இருக்கிறது.

நேரு பண்டிதரின் மறைவின் காரணமாக உருவாகியுள்ள நிலைமையைக் காமராஜர் தக்கமுறையில் பயன்படுத்தி இன்று அகில இந்திய அரங்கில் நல்லதோர் இடம்பெற்றுவிட்டிருக்கிறார்.

அவருடைய நெருங்கிய நண்பர்கள், அவர் அடுத்தபடி குடிஅரசுத் தலைவராகக் கொலுவீற்றிருக்கப் போகிறாரா—அல்லது பிரதம மந்திரியாக அரசோச்சப் போகிறாரா என்று இப்போதே ஆரூடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பச்சைச் சிரிப்பினை உதிர்த்தபடி இச்சகம் பேசிடும் இயல்பினரோ, அவரிடமே கூறுகிறார்கள், இந்திய துரைத்தனமே 'ஐயா'வின் கரத்தில்தான் இருக்கிறது என்று. நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமை காரணமாக இன்று காமராஜர் அகில இந்திய முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

ஆனால் இதிலே கிடைத்த வெற்றியை, பிரச்சினைகளைத் தீர்க்க, வேதனைகளைப் போக்க, மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த, காமராஜர் பயன்படுத்திக் கொள்வதில், இன்றுவரை பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளத்தக்க வெற்றி பெற்றாரில்லை.

உலா வருவதற்கும் உபசாரம் பெறுவதற்கும், பேட்டி அளிப்பதற்கும் பேருரை ஆற்றுவதற்கும், மட்டுமே, பெருமைமிகு நிலைமையை அவர் இனறுவரை பயன்படுத்தியபடி இருக்கிறாரேயன்றி, எழுமபியுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் பயன்படுத்தவில்லை.

அவருடைய நண்பர்கள் கூறுவதுபோல, லால் பகதூர் சர்க்கார் ஓடுவதே காமராஜர் போட்டுள்ள தண்டவாளத்தின் மீதுதான் என்று கூறிக் காமராஜரை மகிழச் செய்வது எளிதான காரியம்; அதிலே பலர் பலன் பெற்றுச் சுவைத்துக்கொண்டிருப்பதாகவும் பேசிக்கொள்கிறார்கள். நாம் அந்த முறையை மேற்கொள்பவர்கள் அல்ல, ஆகவேதான், உருவான நிலைமையினால் கிடைத்துள்ள உயர்நிலையை உருப்படியான காரியத்துக்குப் பயன்படுத்தவில்லையே என்பதனைச் சுட்டிக்காட்டி, நமது வருத்தத்தை வெளியிட்டுக்கொள்கிறோம்.

கிடைத்த இடம் கெட்டுவிடக்கூடாது, பிடியில் சிக்கியது நழுவிப் போய்விடக்கூடாது என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருப்பதன் காரணமாகவே, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பதவியைக் கொண்டு நிரந்தரமான பலன், மக்களுக்குக் கிடைக்கக் கூடிய விதமான செயலில் ஈடுபட்டு வெற்றி ஈட்டிட காமராஜரால் முடியவில்லை என்று எண்ணுகிறோம்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் ஆகிவிட்ட காரணத்தால், அகில இந்தியாவிலும் உள்ள பல வகைப்பட்ட தலைவர்களையும் திருப்திப்படுத்தியாக வேண்டும் என்ற முறையை அவர் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எவரையும் பகைத்துக்கொள்ள கூடாது, எந்தப் பக்கமும் முழுவதுமாகச் சேர்ந்துவிடக்கூடாது என்று எண்ணிக் கொண்டு, 'மதில்மேல் பூனை'போலிருக்கிறார்போலும்.

நியாயத்தின் பக்கம் சேரவேண்டும், நீதிக்காகப் பரிந்து துணைநிற்க வேண்டும் என்ற தூய நோக்கம் கொண்டவர்கள் இதுபோல, 'இவருக்கும் வேண்டியவர், அவருக்கும் நண்பர்' என்ற பெயர் எடுக்க நினைக்க மாட்டார்கள். தமக்குக் கிடைத்துள்ள வலிவினையும் வாய்ப்பினையும் நியாயத்தின் வெற்றிக்குத் துணை நிற்கச் செய்திடுவர்.

காமராஜர் இதுபோலச் செய்யவில்லை; நிலைமையின் காரணமாகக் கிடைத்த வாய்ப்பினை, கிடைத்த இடம் கைநழுவிவிடாதபடி பாதுகாத்துக்கொள்வதற்கு மட்டுமே பயன்படுத்துகொள்கிறார் என்பதனை விளக்கிட, மொழிப் பிரச்சினையில் அவர் மேற்கொண்டுள்ள போக்கை ஆராய்ந்து பார்த்தால் போதும்.

சில கிழமைகளுக்கு முன்பு **'ஆனந்தவிகடன்'** படத்துடன் கூடிய ஒரு புகழ் மாலை சூட்டிக் காமராஜரை வழி பட்டதனைக் காணும வாய்ப்புப் பெற்றோம்.

காமாராஜர், மொழிப் பிரச்சினை குறித்து வெளியிட்டுள்ள கருத்துகளை, — அவை ஒன்றுக்கொன்று பொருந்துகின்றனவா என்பதுபற்றி ஆராய மறுத்துவிகடன், அவர் எல்லா தரப்பினரையும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்திடத்தக்க விதமாகப் பேசுகிறார் என்று பாராட்டிற்று.

இந்திதான் ஆட்சி மொழி இதை மாற்ற முடியாது என்கிறார்—உடனே இந்தி ஆதிகக்காரர் மகிழ்ச்சி அடைகிறார்களாம்.

இந்தியைத் திணிக்கக்கூடாது என்று பேசுகிறார், உடனே கழகத்தார் களிப்படைகிறார்கள்.

ஆங்கிலத்தை விட்டுவிடக் கூடாது; வெறுக்கக் கூடாது என்று பேசுகிறார்; உடனே ஆச்சாரியார் அகமகிழ்கிறார் இவ்விதமாக, மெத்தச் சாமாத்தியமாகப்

பேசி, எல்லாத் தாப்பினரையும் காமராஜர் திருப்தி கொள்ளச் செய்கிறார் என்று பூரித்துப் போகிறது விகடன்.

ஆனால் இந்தச் சாமர்த்தியம், எழும்பியுள்ள பிரச்சினையைத் தீர்க்க உதவுகிறதா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியதே தவிர, எவரெவரைத் திருப்திப் படுத்த என்னென்ன கூறுவது என்பதல்ல.

முன்னுலே பார்த்தால் செட்டியாருடையதுபோல இருக்கிறது பின்னுலே பார்த்தால் ராவுத்தருடையது போல இருக்கிறது என்று குதிரை களவுபோன வழக்கில் சாட்சி சொன்னராமே ஒருவர்—கதையில் வருகிறதே—அவருடைய சாமர்த்தியம்கூட இதுபோன்றதுதான்; இருவரில் எவருடைய பொல்லாப்பும் தனக்கு வேண்டாம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியாளர்!! ஆனால் அவ்விதமானவரைப் பாராட்டுவதில்லை, ஆசாமி நெளிகிறுன் என்று கேலி பேசுவார்கள்! விகடன்கூட, வேறு யாராவது ஒரு பிரச்சினை பற்றி இப்படி பலரை மகிழச் செய்ய பலவிதமான கருத்துக்களைக் கூறினால், கண்டிக்கும், கேலிப் படம் போட்டுக் காட்டும்—ஆனால் பேசுபவரின் நிலையைப் பார்த்து, கேலிக்கு உரியதைப் பாராட்டுக்கு உரியதாக மாற்றிக் கொள்கிறது.

சிறுவர்கள் படிக்கும் கதையிலேகூட வருகிறதே, வெளவால்! மிருகத்திடம் சென்று நான் மிருகந்தான், பார், குட்டிக்குப் பால் கொடுக்கிறேன் என்று பேசிற்றும்; பறவைகளிடம் சென்று, பார்! இறக்கை! பறக்கிறேனே, இதிலேயே தெரியவில்லையா, நான் பறவை இனம் என்பது என்று கேட்டதாம். விகடன், வெளவாலின் திறமையைப் பாராட்டாது; வெளவால் என்ன அகில இந்தியத் தலைவர் பீடத்திலா வீற்றிருக்கிறது!!

இருதரப்பினரின் விருப்பத்தையும் பெற்றுக்கொள்ளத்தான் வெளவால் அந்தவிதமான 'சாமர்த்தியம்' காட்டிற்று. ஆனால் இறுதியில் அதற்குக் கிடைத்த பலன்? மிருகமும் சேர்த்துக் கொள்ளவில்லை; பறவையும் வேண்டாமென்று கூறிவிட்டது; வெளவால் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது; சாமர்த்தியத்தின் விளைவு போலும்!!

இந்திதான் ஆட்சி மொழி!

இந்தி ஆட்சி மொழியாக வந்துவிட முடியுமா! சுலபமா! ஐம்பது வருடம் பிடிக்கும்.

இந்தியைப் படிக்காமல் இருக்கலாமா! படிக்கத்தான் வேண்டும்.

இந்தியைப் படி! படி! என்று சொல்ல இவர்கள் யார்? அப்படிச் சொல்லக்கூடாது.

ஆங்கிலத்தை விட்டுவிட முடியுமா? அது உலக மொழி! கட்டாயம் வேண்டும்.

ஆங்கிலம் அன்னிய மொழி, அதைச் சிலபேர் கட்டிக்கொண்டு அழுகிறார்களே ஒப்புக்கொள்ள முடியுமா?

இவ்வளவும் 'அவரே' பேசுகிறார்; காமராஜரே!!

விகடன் இதைத்தான் பெறுவதற்கரிய பேரறிவு என்று பாராட்டுகிறது; பாராட்டினால் மட்டும் போதுமா என்றெண்ணி படம் போட்டுக் காட்டுகிறது.

ஆனால் காமராஜர் என்ன அவ்வளவு விவரம் தெரியாதவரா? இல்லையே! அப்படி இருக்க முடியாதே!! விவரம் தெரியும்; வேண்டுமென்றேதான் அவ்விதம் பேசுகிறார்; அப்படிப் பேசினால் மட்டுமே அகில இந்தியப் பதவி தம்மிடமிருந்து பறிபோகாமலிருக்கும் என்பதற்காகப் பேசுகிறார்.

இந்திதான் ஆட்சி மொழி என்று அடித்துப் பேசுகிறார்; ஒரு தென்னுட்டுக்காரர் துணிந்து பேசுகிறார்!—இவர்தான் அகில இந்தியத் தலைவராக இருக்கவேண்டும் என்று வடபகுதியினர் கூறவேண்டும்.

அதுபோலவே இந்தியைத் திணிக்காதே என்று வீரதீரமாகப் பேசுகிறார்—இவரல்லவா பெருந்தலைவர்; நம்மவர் இந்தப் பெரிய இடத்தில் இருப்பது மிக மிகத் தேவை என்று தென்னுட்டார் கூறவேண்டும்.

இரு பகுதியினரின் ஓட்டுகளையும் பெற்று, அகில இந்தியத் தலைவர்—இடத்தில் கொலுவிருக்கவேண்டும்.

இந்தக் 'காரியவாதம்'தான் காரணம், காமராஜரின் மொழிப் பிரச்சினை பற்றிய பல திறப்பட்ட கருத்துகளுக்கு.

இந்தப் போக்குடன் நில்லாமல், இப்போது அவர் காரியக் கமிட்டியில் நிறைவேற்றியுள்ள தீர்மானம், முழுக்க முழுக்க இந்திக்காரருக்கு சாதகமானதாக அமைந்துவிட்டது.

இந்திதான் ஆட்சி மொழி இந்தி; கட்டாயப்படுத்தப் படவேண்டும்.

என்ற இரு கருத்துக்களை வலியுறுத்திவிட்டார்; இந்தி பேசாத பகுதியினருக்குத் துரோகம் இழைத்திடத் துணிந்துவிட்டார்.

இந்தி மட்டும் ஆட்சிமொழி என்பது ஆபத்தல்லவா என்ற மனக்குமுறலை ஓரளவு அடக்கிவைக்க, ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்ற திட்டம் சட்ட வடிவத்தில் வரும் என்று கூறியிருக்கிறார்.

இது ஆபத்தைப் போக்குவது அல்ல; ஆபத்து வந்திடும் நாளை, வேளையைக் கொஞ்சம் தள்ளிப்போடுவதாகவே இருக்கிறது.

குழப்பத்தைப் போக்கவில்லை; அதற்கு ஒரு தேசியச் சீலை போட்டு மூடிவைக்கிறார்.

காரியக் கமிட்டியின் தீர்மானம், இப்போதைக்கும் இன்னும் சில காலத்துக்கும் காமராஜருக்குக் கிடைத்துள்ள அகில இந்தியத் தலைமைக்கு ஆபத்து வந்திடாமல் தடுத்துக்கொள்ள மட்டுமே பயன்படும்; இந்தி பேசாதாரை இந்தி ஆதிக்கத்துக்கு இரையாக்கும் கொடுமையை ஒழித்துக் கட்டாது; மாறுக அந்தக் கொடுமைக்கு உடந்தையாக இருந்திடும்.

கிடைத்த இடத்தைக் கொண்டு, நியாயத்தை நிலைநாட்டாமல், கிடைத்த இடம் பறிபோகாதிருக்கும் வழியைத்தான் காமராஜர் வகுத்துக்கொண்டார்.

மொழி பற்றிய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் இந்தி ஆதிக்கத்துக்குப் பச்சைக் கொடி காட்டிடும் முறையிலேயே அமைந்திருக்கிறது. வேகத்தைச் சற்று குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டிருப்பது ஒன்றுதான், காமராஜர் தாமும் ஒரு தென்னுட்டவர், இந்தி பேசாத பகுதி வாழ்பவர், தமிழர் என்பதை மெய்ப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி. கோடிக்கணக்கானவர்கள்—இந்தி பேசாதார்—குமுறுகிறார்கள்; அவர்கள் அனைவரையும் துடிதுடிக்கச் செய்துவிட்டு, இந்தி ஆதிக்கத்துக்கு பலியாகி

(4-ம் பக்கம் பார்க்க)

மகிழ்ச்சி

"பழக்கடைதானே இது! பவுன் நகை விற்கிற கடையா! கூடை இவ்வளவு என்று வாங்கி டஜன் இவ்வளவு என்று விற்று, அதிலே ஏதேனும் ஆதாயம் கிடைத்தால் அதைக்கொண்டு குடும்பம் நடத்த வேண்டும். பத்துப் பழம் அழுகிப் போனால் ஒருநாள் வருமானம் போய் விடும்! பதம் கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வியாபாரம் முன்புபோலவா இப்போது? இரண்டணாதான் கொடுப்பேன் அசல் நாக்பூர் கமலா கொடுக்கவேண்டும் என்கிறார்கள்! காஷ்மீர் மாதுளம் பழம், விலை ஒண்ணரை ரூபாய் என்று சொன்னால் நம்புகிறார்களா! உடைத்துக்காட்டு என்கிறார்கள்! வாயிலே கொஞ்சம் போட்டுக் குதப்பிக் கொண்டே இதுவா காஷ்மீர்? யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? நான் என்ன இப்போதுதான் புதிதாகக் காஷ்மீர் மாதுளம் பழம் வாங்க வந்தவனா! என்றெல்லாம் பேசுகிறார்கள். ஒவ்வொரு நாள் அடக்கிக்கொள்ள முடியாத கோபம்கூடத்தான் வருகிறது, போய்யா! போய் நேரே காஷ்மீர் கடை வீதிக்கே போய் கூடை கூடையாக மாதுளம் பழம் வாங்கிக் கொண்டு வா! என்று கூறிவிடலாம் என்று கூடத் தோன்றுகிறது. சொல்ல முடியுமா! வியாபாரம் கெட்டுப் போகுமே!! அதனால் பொறுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது!"


பழக்கடை பரமசிவம் இது போலெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கப் பட்டுக் கொண்டு இருந்தார்; ஆனால் அந்தக் கடையிலே கிடைத்த வருமானத்தைக் கொண்டுதான் நாலாயிரம் ரூபாயில் ஒரு மச்சுவீடும் ஆறுயிரத்தில் நிலமும் வாங்கினார். ஒரே மகன்! அவன் வேறு ஏதேதோ வேலைக்குப் போவான் என்று ஆசைப்பட்டார், முயற்சி செய்து பார்த்தார், முடியவில்லை பரமசிவத்துக்கு முடக்குவாதம். பூங்காவனம் பழக்கடை வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. வியாபார நெளிவு சுளுவுகளை பரமசிவம் தன்னால் கூடுமான மட்டும் மகனுக்குக் கூறிவைத்தார். பயன்? பூங்காவனத்தால் முடியவில்லை, வாடிக்கைக்காரர்களை மகிழவைத்திட.

அந்த வித்தைக்கென்றே பிறந்தவன் **வேளியப்பன்** என்று பலரும் கூறத்தக்கவிதமாக நடந்துகொண்டான், பரமசிவம் பழக்கடைக்கு எதிர்ப்புறத்தில் புதிதாகக் கடை வைத்தவன். எங்கிருந்துதான் கற்றுக்கொண்டானோ தெரியவில்லை, ஒரு ஒய்யாரச் சிரிப்பு, குழைவான கும்பிடு; வேளியப்பன் கடை வைத்த மூன்று மாதங்களுக்குள் பரமசிவத்திடம் பத்து வருஷங்களாக வாடிக்கைக்காரர்களாக இருந்தவர்களையெல்லாம் இழுத்துப் கொண்டான், தன் வலையில்.

கல்கண்டு சாமி! ஒரு சுளை சாப்பிட்டுப்பாரேன்! நீ வாங்காமப் போனாக்கூடப் பரவாயில்லை, நம்ம கடை சரக்கைக் மட்டும் குறை சொல்லாதே!

நாக்பூர் ஆரன்ஜு வேணுமா உங்களுக்கு. கூடை கூடையா கத்தர்ரேன். ஆனா, இது நம்ம சேலத்து சரக்குதான், சும்மா வாயிலே போட்டுப்பாருங்க..... எப்படி...? நாக்பூரு என்னா செய்யும் இந்த பழத்துக்கிட்ட....

அது வேறே கொய்யாப் பழமுங்க, வயத்துவலி உண்டாக்கற



பழம். விதை அதிகம் இருக்கும். இது பாருங்க, விதையே கிடையாது; வெண்ணெ மாதிரி இருக்கும்.....

மலே வாழைப்பழம், நம்ம கடைக்குன்னு தனியா வருதுங்க மதுரை கொடைக்கானலிலே இருந்து. வேறே இடத்திலே கிடைக்காது. மூணு டஜன்தான் மிச்சம் இருக்குது. மூணு லாந்தர் தெரு சேட்டு வாரிகிட்டுப் போயிட்டாரு எட்டு டஜனே...

என்னென்னமோ பேசுகிருன் எப்படியோ, வருகிறவர்களே வாங்கும் படிச் செய்கிருன், வியாபாரம் வளருகிறது.

அது அந்தப் பரமசிவத்தோட போச்சி! பையன் ஒன்றும் திறமை சாலி இல்லே.....கடை தூங்குது பாருங்க.....மாம்பழம் கேட்டா வாழைப்பழத்தைக் கொடுக்கருன் ...ஆரஞ்சு கொடுடான்னு சாத்துக்குடி வேணுமான்னு கேட்கருன்; பூங்காவனம் பழக்கடை வேலைக்கு ஏத்தவனு தெரியவில்லே என்று வாடிக்கைக்காரர்களே பேசிக் கொள்வது பூங்காவனத்தின் காதிலேயும் விழத்தான் செய்கிறது. கண்ணுக்குத் தெரிகிறது, எதிரே உள்ள கடையிலே நடைபெறும் சுறுசுறுப்பான வியாபாரம், தெரிந்து? என்ன செய்வான்!

சிறிய நகரம், விவசாயத்தை நம்பி வாழுகிறவர்களும், உத்தியோகம் செய்து அலுத்துப்போய் ஓய்வு பெற்றுக்கொண்டு வந்த பென்ஷன் காரர்களும் உள்ள இடம். அந்தச் சிறிய ஊருக்கு, இரண்டு பழக்கடை அதிகம். ஒரே கடையாக இருந்த போது பரமசிவத்தின் வியாபாரம் நல்லபடி இருந்தது. போட்டிக்கடை வந்ததும், வியாபாரம் கெட்டுவிட்டது. வேளியப்பனிடம் போய்க் கேட்டுக்கொள்ளவா முடியும், "அப்பா! இந்த ஊருக்கு இரண்டு கடை கட்டிவராது. போட்டிபோட்டு என்னேப்பாழாக்கிவிடாதே" என்று.

நேத்து வந்த பயலோடு போட்டி போட்டு வியாபாரத்தை நடத்த முடியலியே நம்ம மகனுலே! துப்புக் கெட்டப்பய! வேறே ஒண்ணும் சொல்லவேண்டாமே இவன், இது தானுங்க நம்ம பரமசிவத்தோட பழக்கடைன்னு சொனனுப் போதுமே; வேறே ஒரு கடையைத் திரும்பிப் பார்ப்பாகளா!! — என்று நோய் காரணமாக வீட்டோடு அடைபட்டுக்கிடந்த பரமசிவம் மனம் நொந்து பேசிக்கொண்டார்.

மகன் எந்தவிதமான தப்பு தண்டாவுக்கும் போகக் கூடியவனல்ல; கெட்ட நடவடிக்கை எதுவும் கிடையாது; ஆனல் வியாபாரத் திறமை இல்லேயே, என்று கவலேப்பட்டார்.

எப்போதும்போலத்தான் பூங்காவனம் பழத்தை நன்றுகத்துடைத்து வைக்கிருன், 'பார்வை'யாக இருக்கும் விதமாக அடுக்கிவைக்கிருன். முனேயிலே ஒருமாதிரி ஆகிவிட்டால் உடனே, அதைத் தனியாக, மறைவாக எடுத்து வைக்கிருன். எப்போதும்போல, வெங்கடாசலபதி படத்துக்குத் தூபதீபம் காட்டுகிருன். சகுனம் பார்த்துக்கொண்டுதான் கடைக்கு வருகிருன். 'கல்லா'ப் பெட்டிக்குக் குங்குமப்பொட்டு இடத்தவறவில்லே. எல்லாம் முன்பு போலத்தான் நடந்து வருகிறது வியாபாரம் தவிர!!

பூங்காவனத்தைக் காண்பவர்கள், அவனுடைய கண்களிலே ஒரு ஒளியும் இதழோரம் ஒரு புன்னகையும் இருந்திடக் காண்கின்றனர். வியாபாரம் சரியாக இல்லே என்பதால் பரமசிவம் கவலேப்படுகிறர், மகனே இனிய குழலோசை கேட்டு சொக்கிவிடுபவன போலிருக்கிருன்.

அப்படி இனித்தது சொக்கியின் பேச்சு! பேச்சு மட்டுமா! பார்வை! நடை! சிரிப்பு!

சொக்கி, வேற்றூரும் அல்ல, வேற்று இடமுமல்ல; மாமன் மகள்!! மாதோபபு குத்தகை எடுத்திருந்தான் மலேச்சாமி; அவன் மகள்; மாம்பழக் கூடையைக் கொண்டு போய்க் கொடுக்கச் செல்வாள், பழக்கடைக்கு பழக்கடையிலிருந்து வேறு வகைப் பழங்களேயும் எடுத்துக்கொண்டுபோய் ஊருக்குள் விற்றுவிட்டு வருவதுண்டு.

"அதோ நேத்து கொடுத்தது கிடக்குதே அப்படியே கூடையிலே...

அப்படி எண்ணிகிட்டு இன்னக்கி எங்கே நீ வராமல் போயிடுவயோன்னு நினேச்சு நினேச்சு மனசு பதறிப் போச்சி சொக்கி!

அய்யே ..... ஆம்பிள்ளேயைப் பாரு! மனசு உருகலாம், கரயலாம் என்னுட்டம் பொம்பளேப் பிள்ளேக்கு; இம்மாம் பெரிய ஆம்பிள்ளேக்கு மனசு பதறலாமா...

என்னேக் கேட்கறயா அந்தக் கேள்வி...

ஏன்! போயி, உங்க அப்பாரைக் கேட்கவா...

அய்யே.....போய் அனுமார் கோவிலு அய்யரைக் கேளு...

கோவிலிலே மட்டுந்தான் இருக்குதா அனுமாரு...

என்ன சொன்னே! என்ன சொன்னே சொக்கிப் பொண்ணு! என்னே அனுமாருன்னு குத்திக் காட்டிப் பேசறியா...

அய்யோவ்! நீ ஏன்யா அனுமாராகப் போறே...பெரிய மலேயைத் தூக்கினவரு அனுமாரு. உனக்குத்தான் கூடை நிறைய மாம்பழம் இருந்தா, தூக்க துணேக்கு ஒரு ஆள் வேணுமே, உன்னேப் போய் சொல்லுவனு அனுமாருன்னு...

வர வர வாய்த் துடுக்கு அதிகமாகுது சொக்கி, உனக்கு...

ஆகட்டுமே, அதனுலேஉனக்கு என்னவாம்! கட்டிக்கப் போறவனுக்கல்லவா அந்தக் கவலே ஏற்படவேணும். உனக்கு எதுக்கு...

அது எந்தப் பய என் பொருளேத் தட்டிக் கொள்ளத் துணிபவன்...

உன்னேட பொருளா! யாரு? நானு! ஆசையைப் பாரு, ஆசையை.....நீ இந்த மாதிரி வீண் ஆசையை புகுத்திகிட்டுத்தான் வியாபாரத்தைக் கெடுத்துக் கொள்றே ..... தெரியுது... எனக்கு...

வியாபாரம் கெட்டுப் போச்சா! யாருக்கு? எனக்கா! அந்த வேளியப்பன் கடையிலே எப்பப் பார்த்தாலும் கூட்டம் இருக்குதேன்னு பாக்கறியா.....பைத்யம், பைத்யம்! விலேயை வேணுமென்றே தள்ளிக் கொடுக்சருன.....டய, தலேயிலே ஏகப்பட்ட நஷ்டம விழப்போவுது பாரேன்...

தலேயிலே விழப் போறது கிடக்கட்டும், கையிலே ஏறி இருக்கற மோதிரத்தைப் பார்த்தயா,

அவன் கையிலே என்ன மோதிரம் இருக்குதுன்னு பார்க்கறதுதான் என்னேடவேலேயா...',

பூங்காவனம் அதையெல்லாம் பார்த்தானே இல்லேயா, சொக்கி, வேளியப்பன் கைவிரல்களில் மோதிரமும், தங்கச் செயின் போட்ட கைக்கடியாரமும், மேனியிலே மினுமினுப்பும் சோந்து வருவதைக் கவனித்துக் கொண்டுவந்தாள். வேளியப்பன் கடைக்கு மூன்று கூடை மாம்பழம் கொடுத்துவிட்டு வரப் போகுமபோதெல்லாம், சொக்கியின் கண்களிலே, வேளியப்பன் வளர்ச்சி

தென்படாமலா இருக்கும். வேளியப்பனும் அன்னியன் அல்ல; தூரத்து உறவுதான்!

இங்கு சிறிதுநேரம் அங்கு சிறிது நேரம் பொழுது போக்குவாள் சொக்கி. கள்ளங் கபடமற்றபெண்; மணமாக வேண்டிய பருவம்; எந்த வீட்டிலும் உலவினுல் மகிழ்ச்சி ஒளி வீசிடச் செய்திடும் அழகு!

அழகிலே பலவகை உண்டு என்கிறார்கள்; இருவகை அவற்றிலே முக்கியமானவை.

ஒன்று பால்போன்றது, மற்றொன்று கள் போன்றது; முன்னது இனிப்புடன் வலிவைக் கூட்டித் தருவது; மற்றது போதை தருவது. சொக்கி, பாற்குடம்! போதை ஏற்றிடும் மினுக்கு, குலுக்கு, தளுக்கு, அவள் அறியாதது. இளமை இருந்தும் அதற்கேற்ற கவர்ச்சி அமையப் பெருததால், பூசுவனவும் பூண்பனவும் தாங்கிக்கொண்டு, உலவிடும் நாகரிக நாரிமணி அல்ல சொக்கி; ஆற்றோரத்து தென்னையிலே தொங்கிடும் செவ்விளநீர்—கொல்லை மேட்டுச் செங்கரும்பு—மூங்கிலுக்கு வண்ணம் பூசி செங்கரும்பு போலாக்கிக் காட்டலாம்—செங்கரும்பு ஆகிவிடாது. கூடையை இடையில் வைத்து சொக்கி நடந்து வரும் அழகு கண்டு, நாட்டியமாடிடும் நங்கை அதுபோல நடந்து காட்டலாம்...ஆனுல் அதுபோலத்தான்! அது வேறு, முற்றிலும் வேறு! பழகிப் பெற்றதல்ல, பயிற்சியால் கிடைத்ததல்ல; உடற் கட்டும் உள்ளத்தில் கள்ளங் கபடமற்ற தன்மையும்கொடுத்திட்ட இயற்கை அசைவு அது.

பாவம்! பூங்காவனத்தால் இவ்விதமாகவெல்லாம் எண்ணிப் பார்த்திட முடியவில்லை; தெரியவில்லை. அவளைக் கண்டாலன்றி அன்று அவன் மனம் அமைதிபெறுது; அப்படி ஒரு நிலையை சொக்கியின் அழகு உண்டாக்கிவிட்டது.

சற்றுத் தொலைவிலே சொக்கி வருகிறபோதே, யாருடனுவது ஏதாவது பேசி, குரல்கொடுப்பாள்; அந்தக் குழலோசை கேட்டதும் பூங்காவனம் தன்னை மறந்துவிடுவான்.

சொக்கி பேசப்பேச அவன் பழச்சாறு பருகியவன்போலாகிவிடுவான் முகத்திலே ஓர் புதிய பொலிவு மலர்ந்துவிடும். இயற்கையிலேயே கூடபூங்காவனம், கெம்பீரத் தோற்றம் உடையவன்.

அவனைக் கண்டதும் மறந்தும் இவன் எவருக்கும் ஒரு கெடுதலும் செய்யமாட்டான் என்று எவரும் கூறுவர்; அப்படிப்பட்ட தோற்றம். இப்படிக்கு எனக்குக் கல்யாணம்? என்று குழைவாகக் கூறிடும் வயது. உன் வயதுதாண்டாப்பா, சின்னப்பனுக்கு; மூணு குழந்தை அவனுக்கு என்பார் தகப்பனுர். "போப்பா! சொக்கியைவிட நான் மூணு வருஷந்தான் மூத்தவனுமே!" என்பான் பூங்காவனம்; தன் மனதிலுள்ள விருப்பத்தை மறைமுகமாகக் காட்ட. புரிந்துகொண்ட தகப்பனுர், "சொக்கியை வேளியப்பனுக்கு முடிக்கப் போவதாகக் கேள்வி" என்றுசொல்லி வைப்பார். கோபம்கோபமாகவரும் பூங்காவனத்துக்கு. சாப்பிடாமலே படுக்கச்செல்லுவான்; தூங்காமலே படுத்துக் கிடப்பான்; கண்ணீர் விடாமலே அழுது கொண்டிருப்பான். பட்டினத்தார் பாடலை முணுமுணுத்தபடி இருப்பான். எல்லாச் சனியனுக்கும் சேர்த்து ஒரே தலைமுழுக்காகப்போட்டுவிட்டு, சாமியார் ஆகிவிடப்போவதாகத் தாயாரிடம் கூறுவான். "பிள்ளையாண்டானுக்குச் சொக்கி சொக்குப்பொடி போட்டுவிட்டாபோல இருக்குதே" என்று பரமசிவத்திடம் அவர்மனைவி கூறுவாள். "கண்ணைச்சிமிட்டிக்கழுத்தை வெட்டி" என்று பாடுவார் பரமசிவம், பழய நினைவுடன். "வாலிபம் திரும்புதோ" என்று கேட்டுவிட்டு, வாயைவிட்டுச் சிரிப்பு வெளியே வராதபடி பார்த்துக்கொள்வாள் பரமசிவத்தின் மனையாட்டி.

சொக்கியை வேளியப்பனுக்கு முடிக்கப்போகிறார்களாமே! என்று



பரமசிவம் சொன்னதிலிருந்து சொக்கி, வேளியப்பன் கடைக்குச் செல்வதைக் கண்டால்கூட ஆத்திரம்கொள்ளத் தூண்டப்பட்டான் பூங்காவனம்.

"எந்தக் கோட்டையைப் பிடிக்க, இவ்வளவு நேரம் பேச்சு நடந்ததோ?

அந்தப்பேச்சை உன்னிடம் சொல்லித்தான் ஆகணுமோ...

மத்தவங்களிடம் சொல்லக் கூடிய விஷயமாப் பேசி இருந்தாத்தானே, பளிச்சுன்னு சொல்ல.....

ஏன் உனக்கு இத்தனை பொருமை வேளியிடம்.....

அண்ணன்னு சொல்லுவயே முன்னே.....

இப்ப நான் அவரை அண்ணன்னு சொல்றதில்லே...

'அவரு' ஆயிட்டானு வேளியப்பன்.....

'அவரு நல்ல சுபாவக்காரரு, உனக்குத்தெரியாது. ரொம்ப 'சாலக்கா' பேசருரு, தெரியுமா. அவரோட பேசிக்கிட்டே இருந்தா பொழுது போறதே தெரியாது...

கண்ணை மறைக்குதுன்னு சொல்லு.....

என்ன ஒருமாதிரியாப் பேசறே ...எதுக்காக அவரிடம் உனக்கு இத்தனை குரோதம்.....

அவரு பெரிய சக்ரவர்த்தி! என்னோட பட்டத்து ராணியைத் தட்டிகிட்டுப் போயிட்டாருன்னு கோபம் — போயேன், உனக்குப் பிடித்தமானதைச் செய்துக்க... நான் தடுக்கவா முடியும்.....

நான் சொல்றேன், உனக்கு அவரிடம் பொருமை. ஆமாம்... வியாபாரத்திலே மளமளன்னு அவரு முன்னேற்றம் அடைந்து விட்டாரே, அதைப் பார்த்து உனக்குப் பொருமை. அவரு செய்கிறது போலச் சாமர்த்தியமா, வியாபாரம் செய்து, அவரு சேர்த்திருக்கறதுபோலப் பணத்தைச் சேர்த்துக்கொள்றதுதானே; யார் வேண்டாமென்கிறுங்கு, அவரா குறுக்கே நிற்கருரு.....

எனக்கு ஒண்ணும் பணம் சேரவேண்டாம்.....

ஏனும்! ஓ! புரியுது, புரியுது! நீதான் சாமியாரு ஆயிடப்போறயாமே; உனக்கு எதுக்குப்பணம்

,,,,,,

அம்மா சொன்னுங்களா, சொக்கி!

சொன்னுங்களே! சொக்கி என் மகனைச் சாமான்யமா எண்ணிக்கொள்ளாதே. சாமியாராகி விடப்போருரு; அப்பறம் அவரு தொட்டா இரும்பு பொன்னுகும், இலுப்பப்பூ மல்லியாகும்; சேலம் நாக்பூராகும் என்றெல்லாம்...

எவ்வளவு கோபமாக இருந்தாலும் சொக்கியின் வேடிக்கைப் பேச்சு, அதனை ஓட்டியேவிடுகிறது. ஆனால் சொக்கி, வேளியப்பன் கடைக்குச் சென்று பேசுவதையும் சிரிப்பதையும் பார்க்கும்போது, ஓடிப்போய் இரண்டுபேர்களையும் ஒரே வெட்டாக வெட்டிவிடலாமா என்ற அளவு ஆத்திரம் வருகிறது. அந்த எரிச்சலால், "ஒரேவிலே! ஆமாம்! வேறே இடம் பார்த்துக்க" என்று பேசி, வாடிக்கைக்காரர் களைக் கூட விரட்டிவிடுகிருமே என்று சில வேளைகளில் தோன்றுகிறது. ஆனால் அந்த எரிச்சல் அடங்கினுல்தானே.....

"தெரியுமா விஷயம்...ரொம்ப நல்லாப் பாடுருரு வேளி"

"அப்படியா! நீதாளம் போட்டேபோல இருக்குது..."

"உன்கிட்டவந்து சொன்னேன் பாரு, நானு; உனக்கு அவரிடம் இருக்கற பொருமை தெரிந்திருந்தும்..."

"எனக்கு என்ன பொருமை அவன்கிட்டே, பெரிய மெடல் வாங்கிவிட்டானு அவன், சங்கீத வித்துவான்னு..."

"வாங்கருரா இல்லியான்னு பாரேன் மெடலு; வரப்போற வைகாசி மாதம்..."

"நாள்கூடப் பார்த்தாச்சா; நல்ல முகூர்த்தந்தானு..."

"எதுக்காக நீ ஒண்ணுகிடக்க வேறெண்ணு பேசறே, நான், வைகாசியிலே நடக்கப்போகுதே அம்மன் திருவிழா அதிலே 'டிராமா' நடக்குமேல்லே, அதிலே வேஷம்போடப்போருரு வேளியப்பன், அதைச்சொன்னேன். நிச்சயமா அவருக்குத்தான் மெடல். அவ்வளவு நல்லாப் பாடருரு..."

வேளியப்பன் மட்டுந்தானு, நாமும்தான் வேஷம்போடுவேமே என்று எண்ணினுன் பூங்காவனம். வெளியப்பன் உட்பட அனைவரும் வரவேற்றுர்கள், சொக்கிமட்டுந்தான் எதிர்ப்பு. உன்னுலே போட்டி போடமுடியாது, பாரேன் நடை பெறப்போவதை என்று மிரட்டினுள். பூங்காவனம் அதனுல் சோர்வு அடையவில்லை.

கூத்து நடைபெற்றது. ஒரே ஆரவாரம், பாராட்டு, கை தட்டுதல்— வேளியப்பன் பாட்டுக்கு. போ உள்ளே! பழம் வில்லு டோய் பழம்; பாடாதே! பாட்டாடா இது. டஜன் எவ்வளவு விலை! — இப்படிப்பட்ட கேலிக் குரல், பூங்காவனத்துக்கு.

சொக்கி சொன்னபடி, தங்க 'மெடல்' வேளியப்பனுக்கு.

அந்த வருஷம், திருவிழாவை முன்னின்று நடத்திவைத்த மூர்த்தி என்பவர், அந்த ஊர்க்காரர்; பல வருஷங்களுக்கு முன்பு நகரம் சென்று, சினிமாப் பட முதலாளியாகி விட்டவர். அவர் கரத்தால், 'மெடல்' தரப்பட்டது வேளியப்பனுக்கு.

மெடல் கொடுத்ததைப் பூங்காவனம் பார்க்கவில்லை. கேலிக் குரல் வலுத்ததும் வேஷத்தை அவசர அவசரமாகக் கலைத்துவிட்டு, வீட்டுக்குப் போய்ப்படுத்தவன், மூன்று நாளாயிற்று வெளியே நடமாட— குளிரும் காய்ச்சலும் பிடித்தாட்டிற்று.

"எப்படி நம்ம ஜோசியம்? மெடல் நான்சொன்னபடி கிடைச்சுது, பார்த்தயா..."

"பெரிய மெடல்...! நீதான் மெச்சிக் கொள்ளணும்.....நான் என்ன, டிராமாவிலேயா சேரப் போறேன்.....பாடத் தெரியாமப் போன என்ன..."

"அவரு சினிமாவிலே சேரப் போருரு, தெரியுமா...கடையை இழுத்து மூடிட்டாரே தெரியல்லே ....."

"கடை கிடையாதா இனி, நெஜமாத்தானு.....அடப் பாவிப் பய! பிழைப்பிலே மண்ணைப் போட்டுக் கொண்டானே..."

"அவரோட பொழப்பு ஒண்ணும் கெட்டுப் போகல்லே. கூத்திலே அவருடைய பாட்டையும் பேச்சையும் கேட்டு, மெடல் கொடுத்தாரே மூர்த்தி, அவரு, சினிமாவிலே சேர்த்துவிடுவதாச் சொல்லி கூட்டிகிட்டே போயிட்டாரு."

"இவனும் போயிட்டானு அந்தப் பேச்சை நம்பி..."

"இவருதான், எப்போ எப்போன்னு காத்துகிட்டு இருந்தாரே சினிமாவிலே சேர வேணும்னு..."

"அவன் சினிமாவுக்காக ஏங்கிக்கிட்டு இருந்தது உனக்கு எப்படித் தெரியும்..."

"என் கிட்டத்தான் ஒவ்வொரு நாளும் சொல்லுவாரே...சொக்கி! சொக்கி! நீதான் உதவி செய்யணும்னு..."

"நீ, என்ன உதவி செய்யறதாம் அவனுக்கு. விளங்கவில்லியே....."

"உனக்கு எது விளங்கிச்சி இது விளங்க! வேளியப்பனுக்கு மெடல் கிடைச்சதும், சினிமாவிலே இடம் கிடைச்சதும் என்னாலே என்கிற உண்மை உனக்கு எங்கே தெரியப் போகுது...உனக்குத்தான் பழம் வதங்கிப் போச்சா அழுகிப் போச்சா என்கிற விஷயமே தெரியறதில்லியே..."

"கேலி கிடக்கட்டும், விவரத்தைச் சொல்லு சொக்கி.

"மூர்த்தியோட அக்கா தெரியுமேல்லோ, எங்க தோட்டத்துக்குப் பக்கத்திலேதானே அவங்க வீடு.....மீனுட்சியம்மா தெரியாது....."

"தெரியும், சொல்லு அவங்களுக்கும் இதுக்கும்..."

"என்ன சம்பந்தம்னு கேட்பே. இந்த வருஷம் திருவிழா நடத்தப் போறவரு மூர்த்தின்னு தெரிஞ்சதும், வேளியப்பன் திட்டம் போட்டாரு, எப்படியாவது, கூத்திலே சேர்ந்து தன்னோட திறமையை மூர்த்தி ஐயாவுக்குக் காட்டி, சினிமாவிலே சேர வழி செய்துகொள்ளவேணும்னு. அதனாலே என்னிடம் சொன்னாரு எப்படியாவது மீனுட்சியம்மாவிடம் சொல்லி, மூர்த்தியோட உதவியைப் பெற்றுத் தரவேணும்னு... நான் அந்த அம்மாவிடம் வேளியப்பன் நல்லாப் பாடுவாரு, நடிப்பாரு, வேஷம் போட்டா பிரமாதமா இருக்கும் என்றெல்லாம் சொல்லிவைத்தேன். இந்த வருஷம் மெடலு வேளியப்பனுக்குக் கிடைக்க வேணும்னு வேண்டிக்கிட்டேன்.....ஆகட்டும் சொக்கின்னு சொன்னுங்க...சொன்னபடியே செய்தாங்க.....மூர்த்தி ஐயா வேளியப்பனை சினிமாவுக்கே அழைத்துக்கொண்டு போயிட்டாரு. என் பூஜை பலிச்சுது. பழம் நழுவிப் பாலிலே விழுந்துது..."

"பூஜை பலிச்சுதா, ரொம்பச் சந்தோஷம். வேளியப்பன் சினிமாவிலே இலட்ச இலட்சமாச் சம்பாதிப்பான்.....வைரத்தாலேயும் தங்கத்தாலேயும் செய்த நகைகளைப் பூட்டுவான்; மோட்டாரிலே சவாரி செய்யலாம்; பங்களாவிலே வாழலாம். சுகமா இரு, சந்தோஷமா இரு....."

"இரு! இரு! இப்ப நீ என்ன எண்ணிகிட்டுப் பேசறே..."

"நல்லாப் புரிஞ்சிகிட்டுத்தான் பேசறேன்.....மெடல் வாங்கிக் கொடுத்தது, சினிமாவிலே 'சான்சு' வாங்கிக் கொடுத்தது எதுக்காக? இதுகூடவாப் புரியாது...வேளியப்பனைக் கட்டிக் கொள்ளத்தானே! அதனாலேதானே அவனிடம் அவ்வளவு அக்கறை..."

"பேசு! பேசு! உனக்கு என்னென்ன தோணுதோ அவ்வளவும் பேசு..."

"எனக்கு என்ன வேறே வேலையே இல்லியா! யாரையாரு கட்டிகிட்டா எனக்கு என்ன? எல்லாம் இந்தக் காலத்திலே குணத்தையா கவனிக்கறாங்க, பணத்தைத்தானே! நீ மட்டும் வேறே விதமாகவா இருக்கப் போறே..."

அதற்குமேல் பேச மனமில்லை பூங்காவனத்துக்கு; வியாபாரத்தைக் கவனிக்கத்தொடங்கினாள். சொக்கி சிரித்தபடி சென்றுவிட்டாள். வேளியப்பன் கடை மூடப்பட்டு விட்டதால், வாடிக்கையாக அங்கு போகிறவர்களும், பூங்காவனம் கடைக்கு வந்தனர். நல்ல வியாபாரம்.

சில நாட்களுக்குப் பிறகு, வீட்டிலே, பூங்காவனத்தின் தாயாரும் தகப்பனாரும் பேசிக் கொண்டிருந்தது, பூங்காவனம் காதிலே விழுந்தது.

"உண்மைதானுங்களா நான் கேள்விப்பட்டது..."

"எதைக் கேள்விப்பட்டே."

"சொக்கியை வேளியப்பனுக்குக் கொடுக்கச் சொல்லி, வேளியப்பனோட அப்பா போய்க் கேட்டாராமே..."

"ஆமாம்.....நானுந்தான் கேள்விப்பட்டேன்..."

பூங்காவனத்தால் அதற்குமேல் அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க விருப்பம் இல்லை. கோபமும் துக்கமும் மனதைப் பிய்த்துவிடும் போலிருந்தது. வெளியே உலாவச் சென்றுவிட்டாள்.

பல நாட்களாகக் கடைப் பக்கம் வராமலிருந்தவர்களெல்லாம் வரலாயினர்; பூங்காவனத்தின் வியாபாரம் மளமளவென்று வளர்ந்தது. வேளியப்பன் காலி செய்துவிட்ட கடையையும் வாடகைக்கு எடுத்துக் கொண்டு, சரக்கு இருப்புவைக்க அதை உபயோகப்படுத்திக்கொண்டான். பரமசிவம் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தார்.

"எப்ப கல்யாணம்? நாள் பார்த்தாச்சா..."

"பெரியவங்கதானே நாள் பார்க்கவேணும். நானேவா பார்ப்பேன்..."

"பெரியவங்க எதுக்கு. தனக்குத்தேவையான மாப்பிள்ளையை பெண்ணே தேடிக்கொள்கிற காலமாச்சே இது."

"எதுக்கும், பெண்ணைப் பெத்தவங்களை வந்து கேட்கவேண்டாமா, கொடுக்கச் சம்மதந்தானுன்னு..."

"வந்து கேட்டாங்களாமே உங்க அப்பாரை..."

"கேட்டது மட்டுந்தான் தெரியுமா? எங்க அப்பா என்ன சொன்னாருன்னு தெரியாதா?"

"என்ன சொல்லுவாரு! சினிமாவிலே சேர்ந்திருக்காரு, சீமாலைப்போறாரு, அவருக்குப் பெண் கொடுக்க இஷ்டமில்லாமலா போகும்..."

இஷ்டம் இல்லன்னுதான் சொல்லிவிட்டாரு."

"என்னது, என்னது! இஷ்டம் இல்லன்னா?..."

"சினிமாவிலே சேர்ந்துவிட்ட ஆசாமிக்கு என் பெண்ணைக் கொடுக்கமாட்டேன். அது கிராமத்துப் பொண்ணு; ஏழைப் பொண்ணு; சினிமாவிலே இருக்கற பளபளப்பு மினுமினுப்பு இதைப் பார்த்து மயங்கிப்போனா, சொக்கியை விரட்டிவிடலாம்னு பின்னாலே ஒரு காலத்திலே எண்ணம் வந்துவிடக்கூடும்; அதனாலே சொக்கியைத் தரமுடியாதுன்னு சொல்லிவிட்டாரு..."

"அடப்பாவமே! நீதானே கஷ்டப்பட்டு, மீனுட்சியம்மாவோட சிபாரிசு பிடிச்சி வேளியப்பனை சினிமாவிலே சேர்த்துவிட்டே... உங்க அப்பா இப்படிச் சொல்லி உன்னோட மனக்கோட்டையை இடித்துப் போட்டுவிட்டாரே...."

(15-ம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத் தொடர்ச்சி

விடும்படிச் செய்துவிட்டு. இவர், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருப்பது எற்றுக்கு!

சாதாரணமாகக் கொல்லவில்லை! யானையின் காலின் கீழ் சிக்கிச் சாகும்படியாக உத்திரவிட்டேன்! என்றுரைத்த ஒரு கொடுங்கோலன்!

தென்னாட்டவருக்கு, தமிழருக்கு அங்கப் பெருமை கிடைக்கிறது; இந்தித் திணிப்பு — இந்தி ஆதிக்கம், சாமான்யமானவரின் ஒப்புதலோடு அல்ல, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் என்ற அளவுக்கு உயர்ந்துள்ள ஒரு தமிழரின் ஒப்புதலுடன் நடைபெற இருக்கிறது. தமிழர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இந்தி பேசாத பகுதியினர் என்ன திட்டத்தை மேற் கொள்ளப் போகிறார்கள்.

உருவாகிடும் நிலைமையைத் திறமையுடன் பயன் படுத்திக்கொள்வதில் வல்லவர் காமராஜர் என்றேும்.

இந்த இலக்கணத்தின்படி, தமிழர்கள், இந்தி ஆதிக்கத்தை வெறுத் தொதிக்கிடும் உறுதியுடன் இருந்து அடுத்த பொதுத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டினால் அத்த நிலை யைத் திறமையாகப் பயன் படுத்திக்கொண்டு இதே காமராஜர் வடக்கே உள்ளவர்களிடம் இத்தி மட் டும் ஆட்சி மொழி என்பது கூடாது என்று வாதாடு வார்; வெற்றி கிட்டும்.

தமக்குக் கிடைத்துள்ள இடத்தைக் காப்பாற்றிக் கெள்வதற்கு மட்டுமே இப்போது உருவான நிலையைக் காமராஜர் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார். தமிழர் கள் விரும்பும் பலன். இந்தி ஆதிக்க ஒழிப்பு நடைபெற வேண்டுமானால், நாம் வேறோர் நிலைமையை உருவாக்கி யாகவேண்டும்; இத்தி ஆதிக்கத்தைப் புகுத்தும் காங் கிரஸ் அரசைத் தமிழர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை அடுத்த தேர்தலில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். அப்போது காமராஜரே, தமிழராவார்! இயல்பில்! துணிவில்! குறிக்கோளில்! உண்மையில்!!

●

அருவருக்கத்தக்கது

அமெரிக்கா அனுப்பிக்கொடுக்கும் கோதுமை, அரிசிபோன்ற உணவுப்பொருள்களுக்கான விலையை, ரூபாய்களாகவே இந்தியப் பேரரசு தருவது என்றும், இந்தத்தொகை இந்தியாவிலேயே, ஒப்புக்கொள்ளப் பட்ட முறைகளிலும் துறைகளிலும் செலவிடப்பட வேண்டும் என்பதும் இந்தியப் பேரரசும் அமெரிக்கக் குடி அரசும் செய்துகொண்டுள்ள ஏற்பாடாகும்

P L. 480 என்று கூறப்படும் சட்டத்தின் அடிப் படையில் கிடைத்துவரும் உணவுப் பண்டங்களுக் காகத் தரப்பட்டு இந்தியாவில் அமெரிக்கக் கணக்கிலே குவிந்துள்ள தொகை விரைவில் ஆயிரம்கோடி ரூபாய் அளவை எட்டிவிடும்

இவ்வளவு பெருந்தொகையை என்ன செய்வது, எப்படிச் செலவிடுவது என்ற பிரச்சினை பலமாகிவிட் டிருக்கிறது.

அமெரிக்க அரசியல் வட்டாரத்தில் இதுகுறித்துப் பல தரப்பட்ட கருத்துகள் உள்ளன. இந்தியா, உதவி பெற்றுக்கொண்டு, நன்றிகூடச் செலுத்தாமல், நம் மையே கண்டிக்கிறதே, இது என்னபோக்கு! சீனக் காரன் வந்தபோது நம்முடைய உதவியை நாடிப்பெற் றனர் இந்தியாவின் சால்திரிகள்; இப்போது அதே சாஸ்திரிகள், அமெரிக்கா வியட்நாமில் குண்டு வீசுவது அக்ரமம் என்று கண்டிக்கிறார்கள். இப்படிப்பட்டவர் களுக்குத் தொடர்ந்து உதவி செய்யத்தான் வேண் டுமா என்று அமெரிக்க செனட்டில் ஒருவர் கோபா வேசமாகப் பேசியிருக்கிறார்.

இவர் போன்றாரின் கருத்தை அமெரிக்க அரசாங் கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், ஒரே அடியாக இந்த மனப்போக்கைப் புறக்கணித்து விடவும் முடிய வில்லை. இதன் காரணமாக, அமெரிக்க அரசாங்கத் தின் போக்கிலே மெள்ள மெள்ள மாறுதல் ஏற்பட்டு விடக்கூடும் என்ற அச்சம் விவரமறிந்த வட்டாரத்திலே உலவி வருகிறது.

இந்த அச்சம் பொருளற்றது அல்ல என்பதை எடுத்துக்காட்டும் விதமாக, அமெரிக்க அரசாங்கம் இப்போது ஒரு புதிய திட்டத்தை வகுத்துக் கொண் டிருக்கிறது


P L. 480 கணக்கிலே உள்ள ரூபாய்களை, அமெ ரிக்க டாலர்களாக்கிக் கொள்ள ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்திருக்கிறது.

இந்தியாவுக்கு உல்லாசப் பயணம் வருகிற அமெ ரிக்கர்கள், டாலர்களைக் கொடுத்து ரூபாய்களைப் பெற்று, அதனை இங்கு செலவிட்டு வருவது இப்போ துள்ள நடைமுறை. இதன் காரணமாக, மெத்தவும் தேவைப்படும் டாலர்கள் இந்தியப் பேரரசுக்குக் கிடைக்கிறது. இது நல்ல வாய்ப்பு; இது மேலும் வளரு வதற்கு வழியும் இருக்கிறது.

இதற்கு உலைவைக்கிற முறையில், இப்போது இந்தியாவுக்கு வருகிற அமெரிக்கர்கள், இந்தியப் பேரரசிடம் டாலர்களைக் கொடுத்து ரூபாய்களைப் பெற் றுக் கொள்வதற்குப் பதிலாக, இந்தியாவிலுள்ள அமெரிக்க அமைப்பினிடம் டாலர்களைக் கொடுத்து ரூபாய்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்துள்ளனர். இதற்கு இந்தியப் பேரரசு இணங்கி விட்டிருக்கிறது. இதன் காரணமாக, இந்தியா டாலர்கள் பெறும்வாய்ப்பு பறிக்கப்படுவது டன், அமெரிக்கா இங்குள்ள பணத்தை டாலர்களாக மாற்றிக்கொண்டு, அமெரிக்காவுக்குக் கொண்டுசெல் லவும் வழி ஏற்பட்டுவிடுகிறது. எனவே இந்த ஏற்பாடு கெடுதலையும் அநீதியையும் மூட்டிவிடக் கூடியது.

அமெரிக்காவிலுள்ள சில ஆத்திரக்காரர்களுக்கு இதிலே மகிழ்ச்சி ஏற்படலாம்; ஆனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உண்மையான நட்பு வளர்ந்திடு வதை இது நிச்சயமாகக் குலைத்திடக் கூடியது. இத்த கைய அருவருக்கத்தக்க ஏற்பாட்டினை அமெரிக்கா மேற்கொள்வதை, நியாயமானது என்றோ, தேவை யானதென்றோ, நடு நிலையாளர்கள் கூட ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அமெரிக்காவின் போக்கிலே ஏற்பட்டுள்ள மாறு தல் இந்த அளவோடு நிற்கப்போகிறதா, மேலும் விரி வடையப்போகிறதா என்பது போகப் போகத்தான் தெரியும்.



(1) இந்தியாவுக்குத் தேசீயப் பறவை மயில் என்கிறார்களே, உண்மையா?

உண்மைதான், ஆட்சி மொழிக்குக் கணக்குப் பார்ப்பது போல— மெஜாரடி பார்ப்பதுபோல இதிலே பார்க்கவில்லை, அழகு பார்த்து, மயில் தேசீயப் பறவை என்று தேர்ந் தெடுத்தார்கள். மெஜாரடி பார்த்திருந்தால் காக்காய் அல்லவா தேசீயப்பறவை ஆகியிருக்க வேண்டும்!

(2) ரஷியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள வித்தியாசம் எப்படிப் பட்டது?

பயிற்சிபெற்ற பயில்வானுக்கும் தெருக்கோடி போக்கிரிக்கும் என்ன வித்தியாசமோ அது போன்றதுதான்.

(3) காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடாகிறதாமே, அது எப்போது எந்த, எந்த விதமாக நடைபெறும்?

விவரங்கள் தெரியவில்லை. நூற்றாண்டு விழா, 1969-ம் ஆண்டு நடைபெறப் போகிறது என்பது மட்டுந்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(4) 'தமிழால் முடியும்' என்று அமைச்சர் சுப்பரமணியம் கூறுகிறாரே, முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைக் கண்டிக்கிற பேச்சு மாதிரி இருக்கிறதல்லவா அவர் பேச்சு?

ஆமாம். கண்டனந்தான். ஆனால் பக்தவத்சலம் என்ன செய்வார், பாபம். சுப்பிரமணியம் மட்டும் டில்லியில் அமைச்சராக இல்லாதிருந்தால், இன்னேரம் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் பேராசிரியர் இலக்குவனர் இருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் போட்டு அடைத்து, 'இது என்னால் முடியும்!" என்று சொல்லியிருப்பார்!!

(5) இஸ்ரேலுக்கும் அரபுத்தலைவர் நாசருக்கும் என்ன தகராறு?

இஸ்ரேல் யூதர்களுக்காக அமைக்கப் பட்ட நாடு அராபியர்களின் இடத்தை யூதர்களுக்குக் கொடுத்து பகை மூட்டி விடுவதாக நாசர் வல்லரசுகள் மீது குற்றம் சாட்டுகிறார். இஸ்ரேலை ஒழித்தாக வேண்டும் அதற்கு அரபு அரசுகள் அனைத்தும் ஒன்று படவேண்டும் என்று முரசெழுப்புகிறார். தூனீசியாவின் போர்க்பூபா நாசரின் இந்தப் போக்கை எதிர்க்கிறார். இஸ்ரேலை ஆதரிப்பதன் காரணமாக, மேற்கு ஜெர்மன் நாட்டுடன் கொண்டிந்த ராஜதந்திர உறவை நாசர் அறுத்துக் கொண்டார்; அவர் வழியைப் பின்பற்றி மற்றும் பல அரபு நாடுகளும் மேற்கு ஜெர்மனியுடன் கொண்டிருந்த உறவை அறுத்துக் கொண்டன.

(6) பிரிட்டிஷ் முதலமைச்சர் வில்சன் திறமைசாலியா?

திறமை இல்லாமலா, மூன்றே ஓட்டு மெஜாரடியை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டு வருகிறார்.

(7) மலேசியாவில், தி. மு. கழகத்தவர் போக அனுமதிக்கப் படுவதில்லையா?

ஏன் அனுமதி இல்லை! சில திங்களுக்கு முன்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கழகத் தோழர்கள் மனோகரனும் ராஜாராமும் மலேசியா சென்று பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டார்களே.

(8) நீர் பார்த்ததிலேயே விநோதமானது எந்த விளம்பரம்?

புரிகிறது! காமராஜர் பயணம் பற்றிய விளம்பரத்தை எண்ணிக் கொண்டு கேட்கிறீர். ஆனால் எனக்கு அதிக விநோதமாகப் பட்டது அந்த விளம்பரம் அல்ல! பெரியார் மன்றத்தில் பாதிரியாரின் உபதேசக் கூட்டம் நடப்பதாக ஒரு விளம்பரம் வந்ததே, அந்த விளம்பரந்தான்.

(9) சிறு கதைகள் தொடர் கதைகள் ஏன் காஞ்சியில் வெளி வருகின்றன?

கருத்துகளைச் சுவைபட எடுத்துக்கூற, கதைகள் பயன் படுவதால்! கதைகளே இல்லையே, முழுக்க முழுக்க அரசியல் கட்டுரைகளே உள்ளனவே என்று கூறி வருபவர்களின் மனக்குறையைப் போக்க.

(10) நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் பாணியில் வில்லுப் பாட்டு நடத்த யார் இருக்கிறார்கள்?

நல்ல கேள்வி கேட்டாயப்பா! என்.எஸ்.கிருஷ்ணனைப் பார்ப்பது போலவே, அவர் பேசுவதைக் கேட்பது போலவே, அதே முத்திரையுடன், அவருடைய மகன் என். எஸ்.கே.கோலப்பன் நடத்தி வரும் வில்லுப் பாட்டைக் கேட்க வில்லையா இன்னமும்.

(11) மொரார்ஜி தேசாய், ஆங்கில மொழிக்கு எதிரியாமே?

அப்படித்தான் தெரிகிறது அவர் பேச்சைக் கேட்டால்— ஆங்கிலத்திலேயே கூடப் பேசுகிறார் ஆங்கிலம் ஒரு அவமானச் சின்னம் என்று ஆனால் அவரே சொல்லுகிறார் என் பேச்சை என் பேரப்பிள்ளையே கேட்கவில்லை என்று அவர் பேரப்பிள்ளை ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிக்கும் பள்ளிக் கூடத்தில்தான் படிக்கிறானும்; தடுத்து நிறுத்த முடியவில்லையாம்.

(12) மதுரையில் பல்கலைக் கழகம் அமையப்போகிறதாமே, யார் அதற்குத் துணைவேந்தராக வரப் போகிறார்கள், தெரியுமா?

கேள்விப்பட்டதைச் சொல்கிறேன் — தமிழ்வேள் பி. டி. இராஜன் துணைவேந்தராகப் போகிறாராம்.

(13) ஆஸ்திரேலியாவிலிருந்து அமைச்சர் சுப்பரமணியம் என்ன கொண்டுவந்தார்?

கோதுமை கொண்டு வரச் சென்றார். ரொட்டி சுடும் நவீன யந்திர அடுப்பு கொண்டு வந்திருக்கிறார்.

திண்ணை

கனடா பயணம் (1)

லால்பகதூர் கனடா நாட்டுக்குச் செல்கிறார்...அடடா! விஜயம் செய்கிறார் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்.....கனடா நாட்டுப் பிரதமருடன் கலந்துரையாடப் போகிறார். தலை நகரான ஆட்டவாவில் அமோகமான வரவேற்பு. பிறகு மான்ட்ரியல் நகர் செல்கிறார். அங்கு ஒரு பல்கலைக் கழகத்திலே லால்பகதூருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப்போகிறார்கள். நயாகரா நீர் வீழ்ச்சியைக்கூடப் பார்க்கப்போகிறார்.

கனடா நாட்டுடைய உதவி, மற்ற பல நாடுகளின் உதவி கிடைத் திருப்பதுபோலவே கிடைத்திருக்கிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் நீலகிரி மாவட்டத்திலே அமைக்கப்பட்டுள்ள மின்சார உற்பத்திக்கான குந்தா திட்டம், கனடா நாட்டின் பேருதவியின் சின்னமாகத் திகழ் கிறது. லால்பகதூரின் கனடா விஜயம், ஏற்கனவே பெற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவிக்கும் முறையிலும், இனிப் பெறவேண்டியவற்றுக்கு வழிகாணும் விதத்திலும் அமையவேண்டும் என்று விரும்புகிறேன்.

கனடா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே ஒரு அங்கம்; பிரிட்டிஷ் அரசியார்கூட சென்ற ஆண்டு அங்கு சென்றிருந்தார்கள் என்ற செய்தி நினைவிலிருக்கும் என்று எண்ணுகிறேன்.


ஹிட்லர், பிரிட்டனைப் படுசூரணமாக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டு, லண்டன் நகர் மீது ஓயாது குண்டு வீசிக்கொண்டிருந்தபோது, பிரிட்டனே அழிக்கப்பட்டுவிட்டாலும் பிரிட்டிஷ் குலக் கொழுந்துகள் வேறு எங்கேனும் சென்று தழைக்கட்டும் என்ற எண்ணத்துடன் எண்ணற்ற பெற்றோர்கள் தங்கள் மழலைச் செல்வங்களைக் கப்பலேற்றி இந்தக் கனடாவுக்குத் தான் அனுப்பிவைத்தார்கள்.

கனடா என்ற உடன் எனக்கு இது மட்டுமல்ல, தமிழக அரசியல் நிகழ்ச்சியொன்றும் நினைவிற்கு வருகிறது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் முன்பு ஒருமுறை வணிக ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளாக இந்தியாவும், கனடாவும் இருப்பதால், இவை இரண்டுக்கும் இடையே வணிகத்துறையில் சலுகைகள் இருத்தல் வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட ஒப் பந்தம் அது. அதனை முன்னின்று நடத்தியவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

அந்த ஒப்பந்தம் இந்தியாவின் நலன்களுக்குக் கேடு செய்வது என்று காரணம் காட்டி, காங்கிரஸ் தலைவர்கள் அதனை மிகப் பலமாகக் கண்டித்து வந்தனர். ஆர். கே. சண்முகத்துடன் தேர்தல் போட்டியில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் தலைவர் சாமி வெங்கடாசலம் செட்டியார், ஒப்பந்தத்தைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசி வந்தார். தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக சென்னை நகரத்தில், ஒவ்வொரு காங்கிரஸ் மேடையிலும் கண்டனம், இதழ்களில் கண்டனம்; ஒட்டாவா ஒப்பந்தம் ஒழிக என்ற முழக்கம்.

அத்தனை கண்டனத்துக்கும் சேர்த்து பதில் அளிக்கும் முறையில், சென்னை விக் டோரியா பொது மண்டபத்தில், சண்முகமும் சர். ஏ. ராமசாமி முதலியாரும் பேசினார்கள். பேச்சா அது!!



சர். சண்முகம் அன்று பேசியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

> நான் முன்னின்று நடத்திவைத்த வியாபார ஒப்பந்தத்தைப்பற்றிக் கண்டனக்குரல் எழுப்புபவர்களின் கூற்று அவ்வளவும் தவறு; முழுத்தவறு; பரிதாபத்துக்குரிய தவறு! ஒப்பந்தம் நடந்த ஊர்ப்பெயரிலிருந்து ஒப்பந்த ஷரத்துகள் வரையில் ஒன்றைக்கூடச் சரியாக அறிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள்; ஏசுகிறார்கள். நண்பர்களே! நான் சென்று கையொப்பமிட்டுவிட்டு வந்த ஒப்பந்தம், நடைபெற்ற நகரின் பெயர், ஆட்டவா!!—ஒட்டவா அல்ல!!

தம்பி! அன்று நான் கேட்ட மகிழ்ச்சி ஆரவார ஒலி போல் இன்னும் கேட்கவில்லை.

அந்த ஆட்டவாவில் லால்பகதூர், கனடா நாட்டுப் பிரதமருடன், பல பொதுப் பிரச்சினைகள் குறித்துப் பேசப்போகிறார்.

கனடாவுக்கும் இந்தியாவுக்குமிடையில், சிக்கலான எந்தப் பிரச்சினையும் அதிக அளவிலே இல்லை. கனடாவின் நட்புறவு மேலும் வளப்படுத்தப்பட வேண்டும்; அம்முறையில் பேச்சு கனியவேண்டும்.

என்ன அண்ணே! நல்லெண்ணத்தைத் தெரியப் படுத்த அவருக்கே நாலுவரி கடிதம் எழுதிவிட்டிருக்கலாமே, அதை விட்டுவிட்டு, என்னோடு பேச வேண்டிய நேரத்தை வீணாக்கிவிடுகிறாயே என்று தம்பி! கேட்கத் தோன்றும். உனக்குச் சில கூறத்தான் லால்பகதூரின் பயணத்தைப்பற்றி எழுதுகிறேன்.

இன்று நம்மை எல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிக்கலான பிரச்சினைபற்றி புதிய தெளிவு பெற்றுக்கொள்ள, கனடா பயணம் பயன்பட வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்; மொழிப் பிரச்சினை பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

ஒருமைப்பாடு; ஒன்றுபட்ட உணர்வு; நாட்டுப் பற்று; விரிந்த மனப்பான்மை; அடிப்படையில் கவனம் செலுத்துவது என்ற சொற்றொடர்கள், சுவைமிக்கன; பொருள்மிக்கன; மிகப் பெரியவர்களால் வழங்கப்படுவன! அவைகளை நான் மறுக்கவில்லை; குறைத்தும் மதிப்பிட்டுவிடவில்லை. இன்னிசை எழுப்பிடும் இந்த சொற்றொடர்களை, நடைமுறையில் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ளும்போது, இடர்ப்பாடுகள் என்னென்ன விளைகின்றன, பிரச்சினைகள் புதிது புதிதாக எவையெவை எழுகின்றன என்பதனைப் பார்க்கும் போது, சுவைமிக்க சொற்றொடர்கள் மட்டும்போதாது, பிரச்சினைகளைத் தீர்த்துவைத்திட இதயத்தின் அடித்தளத்தில் ஊடாடிக்கொண்டிருக்கும் எண்ணங்களைக் கண்டறிந்து, மதிப்பளித்தாகவேண்டும் என்பதுபுரியும். கனடாவில் இப்போது இந்தக் கட்டம் காணலாம்; விரும்பினால், அக்கறை எடுத்துக்கொண்டால். லால் பகதூர் அக்கறை காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவர் செல்ல இருக்கும் இடம அவர் மனதில் அந்த எண்ணத்தை நிசயமாகக் கிளறிவிடும். மான்ட்ரியல் நகருக்கும் அவர் செல்ல இருகிறார் என்று அறிகிறேன். கனடாவின் தலைநகர் ஆட்டவா; மான்ட்ரியல் ஒரு புதிய எழுச்சிக்கு இருப்பிடமான தலைநகராகி இருக்கிறது.

தம்பி! க்யூபெக், கனடாவில் ஒரு மாநிலம்; மத்திய அரசுக்கு உட்பட்ட ஒரு மாநில அரசு; மொத்தம் பத்து மாநில அரசுகளை இணைத்துக் கொண்டுள்ள அமைப்பு கனடா நாட்டின் மத்திய சர்க்கார்—பேரரசு.

3,619,616 சதுர மைல் கொண்டது கனடா! 16,589,000 மக்கட் தொகை.

இதிலே, க்யூபெக் 523,860 சதுர மைல் கொண்டது; 4628,378 மக்கட் தொகை, கொண்ட மாநில அரசு. இதன் தலைநகர் க்யூபெக்; 166,996 இங்நகரின் மக்கட் தொகை; மான்ட்ரியல் 1,094,448 மக்கட் தொகை கொண்டது.

இந்த விவரம், நான் காரணமற்றுத் தரவில்லை.

பேரரசிலே இணைந்துள்ள பத்து மாநிலங்களிலே ஒன்றுன க்யூபெக் மாநிலத்திலிருந்து கிளம்பியுள்ள பிரச்சினை—மொழி அடிப்படையிலே துவக்கப்பட்ட பிரச்சினை—இன்று கனடாநாட்டின் எதிர்காலத்தையே ஒரு பெரிய கேள்விக் குறியாக்கி விட்டிருக்கிறது என்பதனைக் குறிப்பிடத்தான் இந்தத் தகவலைத் தந்தேன்.

க்யூபெக் மாநிலத்திலிருந்து எழும்பியுள்ள இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதைப் பொறுத்துத்தான், கனடாவில் பேரரசு இருக்குமா, அல்லது அது போரரசு ஆகவேண்டி நேரிடுமா என்பது முடிவாக இருக்கிறது என்று. வீண் மிரட்டல் பேச்சுக்காரர்கள்அல்ல, வதந்திகளைக் கிளப்பிவிடுவோர் அல்ல, பொறுப்பு மிகக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எனக்கே இது புரிந்திருக்கிறபோது, அங்குச் செல்லும் லால்பகதூர் இதனை உணராமலிருந்திருக்க முடியாது.

ஆனால் கனடாவின் உள்நாட்டுப் பிரச்சினை அது; அதுபற்றி வெளிநாட்டுத் தலைவர் ஏதும் கருத்தளிப்பது கூடாதே என்று கூறுவர்; நான் அதுபற்றிக் கருத்து அளிக்கும்படி லால்பகதூரைக் கேட்டுக் கொள்ளவில்லை; அங்கு உள்ள நிலைமையைப் பார்த்து, பிரச்சினையைப் புரிந்துகொண்டு, கருத்திலே கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தம்பி! எழும் பிரச்சினைகளை ஏளனம் செய்து விடுவது எளிதான காரியம்; அதிலும் சிக்கலைத் தீர்த்திட வகை தெரியாதபோது, பிரச்சினைகளை அலட்சியப் படுத்திப் பேசிவிடுவது, தோல்வியை மறைத்திடக் கூடப் பயன்படும். பிரச்சினைகள், கிளம்புகின்றன; கிளப்பப்படுவதில்லை! பிரச்சினைகளைச் சந்திக்கும் துணிவும்; புரிந்துகொள்ளும் தெளிவும், தீர்த்துவைக்கும் ஆற்றலும் அற்றவர்கள், பிரச்சினைகளை வேண்டுமென்றே யாரோ, எதற்காகவோ, கிளப்பிவிடுகிறார்கள் என்று பேசுகின்றனர்; பேசிவிட்டு பிரச்சினைகளைச் சந்திப்பதற்குப் பதிலாக, எந்த பலிகிடா கிடைக்கும் என்று தேடித் திரிகிறார்கள்.

காரணமற்று, எந்தப் பிரச்சினையும் எழுவதில்லை; எழும் பிரச்சினையின் நியாயத்தை உணர்ந்தவர்கள் அதன் பக்கம் நிற்கிறார்கள், வாதாடுகிறார்கள், அவர்கள் பிரச்சினையால் ஈர்க்கப்பட்டவர்கள், கிளப்பிவிட்டவர்கள் அல்ல.

ஆனால், ஆதிக்கத்தில் உள்ளவர்கள், எழும்எந்தப் பிரச்சினையையும், இயற்கையானது, நியாயமானது, கவனிக்கப்பட வேண்டியது என்று எந்தக் காலத்திலும் ஒப்புக் கொண்டதில்லை.

கொடுங்கோலை எதிர்த்து மக்கள் குமுறியபோது கூட, ரஷிய ஜார் சொன்னதும், "என் குழந்தைகளை எப்படி நடத்தவேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்று.

இந்தியாவுக்கு சுயராஜ்யம் வேண்டும் என்ற பேச்சு எழுந்தபோது, வெள்ளை ஏகாதிபத்யம் அதனை ஒரு பிரச்சினை என்று ஒப்புக்கொண்டதா? துவக்கத்தில்.

வேண்டுமென்றே, சில கலகக்காரர்கள் கிளப்பி விடும் பிரச்சினை—இது அடக்கப்பட வேண்டியது—கவனிக்கப்பட வேண்டியது அல்ல—என்றுதான் பேசினர்கள்; வாதாடினர்கள்.

அதே முறையிலேதான் இந்தியப் பேரரசும் எந்தப் பிரச்சினையையும்—மொழிப் பிரச்சினை முதற்கொண்டு வாழ்க்கை வழிப் பிரச்சினைவரை—எதனையும் இயற்கையானது என்றோ, நியாயமானது என்றோ ஒப்புக் கொள்வதில்லை.

வீணான பயம்; காரணமற்ற கலக்கம்; குழப்பம்; சந்தேகம்; என்று பல பேசி, பிரச்சினைகளுக்காக வாதாடுபவர்களை விவரமறியாச் சிறுவர்களாகச் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

கனடாவில், துவக்கத்திலே க்யூபெக் மாநிலத்திலிருந்து எழுந்த பிரச்சினையை, அலட்சியப்படுத்திப் பார்த்தனர் என்றாலும், பிறகு அது இயற்கை வலிவுடன் உள்ளது என்பதனையும், வளர்ந்து வருகிறது என்பதனையும் உணர்ந்து, பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் தீவிரமான முயற்சியினை மேற்கொண்டுள்ளனர்.

லால்பகதூர், கனடா செல்லும் இந்த நேரம், கனடியப் பேரரசு, பிரச்சினையை அலட்சியப்படுத்திய நேரம் அல்ல, பிரச்சினையை முழு அளவில் கண்டறிந்து, சிக்கலைப் போக்கிட வழி தேட, முனைந்துள்ள நேரம்.

இங்கு பேசப்படுவது போலத்தான், ஒருமைப்பாடு, ஓரரசு என்பனபற்றிய பேச்சு கனடாவில் பேசப்பட்டது; இங்காவது 17 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது, அங்கு நெடுங்காலமாக!

நாம் அனைவரும் முதலில் இந்தியர், பிறகே பிற என்று பேசுகிறோம்; ஒருவருக்கு மற்றவர் தாராளமாக இந்த உபதேசத்தை வழங்கி வருகிறோம்; அதேபோது கிளை அஞ்சல் அலுவலகத்தில் துணை அதிகாரியாக வந்திருப்பவர், நம்மவரா! என்று கேட்டறிந்து, காற்றினிலே வரும் கீதமாகக் கொள்கிறோம் அந்தச் சேதியினை!!

அங்கும், நாம் அனைவரும் கனடியர்—கனடா நாட்டவர்—என்ற 'தேசியம்' இருக்கிறது; நெடுங்காலமாகக் கொலுவிருக்கிறது. கனடியர் என்ற தேசிய உணர்ச்சியின் முன்பு மதம் பிரதேசம், மொழி எனும் எதுவும் நிற்காது; கதிரவன் ஒளிமுன் மின்மினி அவையெலாம் என்று பேசத் தவறவில்லை.

கட்டுரைகளும் கவிதைகளும், கனடா தேசிய உணர்ச்சியை மலரச்செய்யப் பயன்பட்டன. ஆனால்.....! ஆமாம், தம்பி! அங்கேயும் அந்த ஆபத்தான 'ஆனால்' படை எடுத்திருக்கிறது!!

அதனைக் கூறுமுன்பு தம்பி! கனடாவின் வரலாற்றைச் சிறிதளவு சொல்லிவிடுவது தேவை என்று எண்ணுகிறேன்—ஏனெனில் பிரச்சினையின் ஆணிவேர் வரலாற்றுடன் பிணைந்துகிடக்கிறது.

கனடா, ஒருநாடு ஆக்கப்பட்ட பூபாகம்! ஒருநாடு ஆக்கப்படுவதற்கு முன்பு, அந்த பூபாகத்தில், தனித் தனி அமைப்புகள் இருந்துவந்தன; ஒவ்வொரு அமைப்புக்கும் ஒரு தனி இயல்பு, அந்த இயல்புக்கு ஏற்றவிதமான நடவடிக்கை, இவ்விதம்.

மிகப் பழைய காலத்தை விட்டுவிடுகிறேன்; பெரும்பெரும் அரசுகள், 'ராஜ்யம்' தேடி அலைந்த கால கட்டத்தில் நடந்தவைபற்றிமட்டும் சிறிதளவு கூறுகிறேன்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்று எந்த பூபாகத்தைக் கனடா என்று குறிப்பிடுகிறோமோ அங்கு, மிகப் பெரிய அளவு இடம், பிரன்ச்சு அரசுக்கு இருந்தது; பிரன்ச்சுக்காரர்களே குடி இருந்தார்கள் என்பதல்ல பொருள்; பிரன்ச்சு ஆதிக்கம் இருந்துவந்தது; அந்த ஆதிக்கம் வளரவளர, அந்த இடத்தில் மேலும் மேலும் பிரன்ச்சுக்காரர்கள் குடியேறினர்.

பிரிட்டிஷ் அரசுக்கும் பிரன்ச்சு அரசுக்கும் ஆதிக்கப் போட்டி நடைபெற்ற நாட்களில்—எங்கெங்கு பிரான்சு ராஜ்யம் அமைத்ததோ அங்கெல்லாம் பிரிட்டிஷாரும் கோட்டை கட்டிக்கொடி பறக்கவிட்டனர். ஆங்காங்கு களம்! இடங்கள் அடிக்கடி கைமாறும்! இப்படிப்பட்டநிலை.

ஏழு ஆண்டுச் சண்டை ஒன்று நடைபெற்றது, பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும்; அது ஐரோப்பிய பூபாகத்தோடு நிற்கவில்லை; இங்கும் நடந்தது; கனடாவிலும் நடந்தது; அப்போது, பிரன்ச்சுப்பிடியில் இருந்த பூபாகம் பிரிட்டனிடம் சிக்கிற்று; அப்படிச் சிக்கிய இடங்களிலே ஒன்று க்யூபெக்; அந்தக் களத்திலே கீர்த்திமிக்க வெற்றிபெற்று உயிர்நீத்தவர் வுல்ப் எனும் பிரிட்டிஷ் தளபதி.

1763-ல், பாரிஸ் பட்டினத்தில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தத்தின்படி கனடா முழுவதும் பிரிட்டனுக்கு ஒப்படைக்கப்பட்டது.

கனடா, பிரிட்டிஷ் பிடியில் வந்தபிறகு, பல மாநிலங்களை இணைப்பதிலும், ஒரே விதமான அரசுமுறை அமைப்பதிலும் ஈடுபட்டனர்; கனடா, கனடியர் என்ற உணர்ச்சி ஊட்டப்பட்டது.

ஊட்டப்பட்ட இந்த உணர்ச்சி பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கே உலைவைத்துவிட்டது. கனடா நமதுநாடு, கனடியர் நாம், ஏன் பிரிட்டனின் அடிமை நாடாக கனடியர் நாம், ஏன் பிரிட்டனின் அடிமை நாடாக இருக்கவேண்டும் என்ற கேள்வி எழுந்தது; கிளர்ச்சி நடந்தது; 1849-ல், கனடாவுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டது; கனடாவின் பல பகுதிகளை இணைக்கும் வேலை முழுமுரமாகி, 1867-ல் கனடா பேரரசு ஆகிடத்தக்க சட்டம் பிறந்தது. பத்து மாநில அரசுகள், ஒரு பேரரசு; பேரரசுக்குத் தலைநகரம் ஆட்டவா; மாநில அரசுகளுக்குத் தனித்தனி மந்திரிசபை என்ற முறையில் அரசு அமைந்தது.

ஏன் இதனைக் கூறுகிறேன் என்றால், தம்பி! 1867-லிருந்து கனடா — கனடியர் என்ற உணர்ச்சி ஊட்டப்பட்டுவந்திருந்த போதிலும், கனடியர் என்ற தேசிய உணர்ச்சி காரணமாக, தத்தமக்குத் தேவைகள் யாவை என்பதுபற்றி எண்ணிடவோ, அவை கிடைக்காதபோது மனம் புழுங்கிடவோ, அந்த மனப் புழுக்கம் ஏற்படும்போது தாங்கள் யார், தமது பூர்வீகம் என்ன? இயல்பு என்ன? என்ற துறையில் சிந்தனையை ஓட்டவோ, அங்கனம் சிந்தனை செல்லும்போது தங்களை யார் அழுத்திவைத்திருக்கிறார்கள், எந்தக் கருவியைப் பயன்படுத்தி என்று ஆராயவும், ஆராய்ந்து பார்த்தபிறகு, நாங்கள் தனி இயல்பினர் எமது இயல்பினை நாசமாக்கும்விதமாக நடந்துகொள்ளும் எந்த ஆதிக்கத்தையும் நாங்கள் எதிர்த்தே தீருவோம் என்று முழக்கமிடவும், அந்த முழக்கம் கேட்டு மற்றவர்கள் இவ்விதமான பேத உணர்ச்சி உனக்கு ஏற்படலாமா, நாமெல்லாம் ஒரே நாட்டினரல்லவா, கனடியர் அல்லவா என்று சொந்தம் பேசவும், அதைக் கேட்டதும் மேலும் எரிச்சல்கொண்டு சொந்தம் பந்தம் பேசிக்கொண்டு

சுகபோகம் அனுபவிக்கிறாய், நாங்கள் தேய்ந்துபோகி றோம் இது அக்ரமம் அல்லவா என்று கேட்டு, அக்ரமம் ஒழிக! அக்ரமம் செய்திடும் ஆட்சி ஒழிக!! என்று முழக்கமிடவும் முடியாமற்போகவில்லை.

அப்படிப்பட்ட முழக்கம் எழுப்பியுள்ள இடம் க்யூபெக்.

இருநூறு ஆண்டுகள் உருண்டோடிய பிறகும், எத்தனையோ நிகழ்ச்சிகளில் கனடியர்என்ற உணர்ச்சி யுடன், க்யுபெக்கில் உள்ளவர்கள் உட்பட ஒன்றுகக் கலந்திருந்தபிறகும், தங்கள் நிலை கெடுகிறது, கெடுக் கப்படுகிறது என்ற எண்ணம் ஏற்பட்டதும், க்யுபெக் தனிக் குரல் எழுப்ப முனைந்துவிட்டது.

நாம் அனைவரும் கனடியர் என்ற பேச்சு, சட்ட சம்மதம் பெற்றுவிட்டது; இருநூறு ஆண்டுகளாக அரசியலில் அந்தச் சொல்லுக்கு தனிப்பட்ட மதிப்பு இருந்துவந்திருக்கிறது; ஆயினும் இப்போது மிகப்பல மாகவும், சில ஆண்டுகளாகவே மெள்ள மெள்ளவும், நாங்களும் கனடியர் என்று பேசிவந்தவர்கள், நாங்கள் கனடாவில் உள்ள பிரஞ்சுக்காரர்கள்; நாங்கள் பிரன்ச்சுக் கன்னடியர்! என்று பேசத் தலைப்பட்டு விட்டனர்.

தம்பி! பதவி கிடைக்காத பசி நோய்க்காரர்கள், பேதம் மூட்டிவிட்டுப் பிழைப்புநடத்துபவர்கள், குட்டை யைக் குழப்பிவிட்டு மீன் பிடிப்பவர்கள் போன்றவர்கள் இப்படிப்பட்ட பேச்சுத்தான் பேசுவார்கள், ஆனால் நாட்டின் அறிவாளர்கள் இத்தகைய பேச்சைத் துச்ச மென்று தள்ளிவிடுவார்கள் என்று கூறுவர்.

> ஆனால், நாங்கள் பிரன்ச்சுக்கன்னடி யர், எமது பிரன்ச்சு மொழிக்கும் பிரன்ச்சு பண்பாட்டுக்கும் பாதுகாப்பும், வளர்ச்சியும் கிடைத்தாக வேண்டும்; பிரன்ச்சுக் கன்னடி யர்களான எம்மீது ஆங்கிலக் கன்னடியர் கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், எல்லாத் துறைகளிலும்; இதனை நாங்கள் பொறுத் துக் கொள்ளமாட்டோம்; உரிமையை இழக்கமாட்டோம்; எமது உரிமை எந்தவிதத் திலும் பாதிக்கப்பட முடியாத விதமான அரசு முறை அமைக்கவேண்டும், இல்லையேல், நாங்கள் பிரிந்துபோகிறோம்.

என்று முழக்கம் எழுப்புபவர் படித்தவர்கள், மாணவர் கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலி னர், மருத்துவத்துறையினர், தேவாலயத் துறையி னர், இத்தகையோர்: விவரமறியாதவர்களுமல்ல, விஷ மிகளும் அல்ல! தேசீயம், ஒருமைப்பாடு, ஓரரசு என் பனபற்றி எல்லாம் அறிந்தவர்கள்; எடுப்பார் கைப் பிள்ளைகள் அல்ல, ஏதுமறியாதாரும் அல்ல.

இத்தனைக்கும் தம்பி! பேதம் எழலாகாது, பிளவு இருத்தல் கூடாது, வஞ்சனை ஆகாது, உரிமையை அழித்தல் பெரும் தீது என்ற உணர்வுடன் கனடா வின் புதிய அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது, மொழி ஏகாதிபத்தியம் ஏற்பட முடியாதபடி பாதுகாப்பு தந்துள்ளனர்.

கனடாவில் உள்ள மக்களில், இரு பெரும் பிரிவி னர் உள்ளனர்; ஆங்கிலர்கள், பிரன்ச்சுக்காரர்கள்.

கனடாவில் உள்ள ஆங்கிலர்கள், மொழி ஒன்றி னால் மட்டுந்தான் ஆங்கிலர், மற்றப்படி அவர்களுக் கும் இங்கிலாந்துக்கும் வேறு தொடர்புகள் குறிப்பிடத் தக்கவிதமாக இல்லை. அதுபோன்றே பிரன்ச்சுக் கன்னடியர் நிலையும்.

இந்த இரு பெரும் மொழிப் பிரிவினரும், மொழி யால் வேறுபட்டவர்கள் என்ற உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, கனடா சுயாட்சி பெற கிளர்ச்சி நடாத்தினர்.

ஆனால் சுயாட்சி நடத்திடும் கனடாவில், தங்கள் உரிமை தழைக்கவில்லை, வாழ்வு செழிக்கவில்லை என்ற தும், மொழி உணர்ச்சி மீண்டும் ஏற்பட்டுவிட்டது. எப்படி முடிந்தது? என்கிறாயா, தம்பி! பொது ஆபத்தை எதிர்த்து நிற்கும்போது ஒதுக்கிவைக்கப்படும் உணர்ச் சிகள், ஒதுக்கித்தான் வைக்கப்படுகின்றன, அவை மடிந்துபோய் விடுவதில்லை. ஆகவேதான் அந்த உணர்ச்சிகள், தமது நலன் கெடுக்கப்படுகிறது, உரிமை பறிக்கப்படுகிறது என்ற நிலை கிளம்பும்போது, மீண்டும் வெளிவந்து விடுகின்றன! அந்த உணர்ச்சி ஒடிந்த வாளாகி விடவில்லை; உறைக்குள் வாளாக இருந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

கனடாவில், பிரன்ச்சு மொழி பேசுவோரைவிட ஆங்கில மொழி பேசுவோரின் தொகை அதிகம்.

அதுமட்டுமின்றி, பிரன்ச்சுமொழி பேசுபவர்கள், களத்தில் ஆங்கிலஅரசால் தோற்கடிக்கப்பட்டவர்கள் அவ்விதம் இருந்தும், ஆங்கிலந்தான் ஆட்சிமொழி, பிரன்ச்சு பிராந்திய மொழியாக இருக்கட்டும், மத்திய



அரசுக்கு, பேரரசுக்கு ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கும் என்று சட்டம் இல்லை. மாறுக கனடாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 133 வதியின்படி, பாராளுமன்றம், அரசாங்கப் பணிமனைகள், நீதி மன்றங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எல்லா அலுவல்களுக்கும், ஆங்கிலம், பிரன்ச்சு ஆகிய இரு மொழிகளும் ஆட்சிமொழிகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; சர்க்கார் வெளியிடும் எல்லாவிதமான அறிக்கைகள், உத்தரவுகள் கொண்ட ஏடுகளும், இரு மொழிகளிலும் வெளியிடப் படவேண்டும், இரு மொழிகளில் எதை வேண்டுமானலும் எவரும் அவருடைய விருப்பப்படி உபயோகித்துக்கொள்ளலாம் எனறு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

களத்திலே தோற்றுப்போனவர்கள் என்பதைக் காரணம் காட்டி, ஒரு மொழித் திட்டத்தை அமுல் செய்திடலாம் என்ற ஆதிக்க நினைப்பு எழவில்லை. நாம் தான் களத்திலே தோற்றுவிட்டோமே, நம்முடைய பிரன்ச்சு மொழிக்கு அரியணை எப்படி நாம் துணிந்து கேட்க முடியும் என்ற தயக்கம் பிரன்ச்சுக் கனடியருக்கும் ஏற்படவில்லை,

மாறுக இருமொழிகளும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன; அதற்கான சட்டம் 1867-ம் ஆண்டு மார்ச் 29-ம் நாள் நிறைவேற்றப்பட்டது.

கிட்டத்திட்ட இருநூறு ஆண்டுகள் இருமொழிகள் ஆட்சி மொழிகளாக அமுலில் இருந்து வருகின்றன.

இருந்தும், மீண்டும் மாச்சரியமா? மறுபடியும் மொழிததகராறு? என்று கேட்கத் தோன்றும்.

இப்போது, மொழி ஆதிக்கம்பற்றிய பிரச்சினை எழவில்லை; இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, மிக்க அரசியல் நுணணறிவுடன் இருமொழிகளையும் ஆட்சி மொழிகள் என்று சட்டம் செய்துவிட்டதால், இந்த இருநூறு ஆண்டுகளாக, மொழி ஆதிக்கம் எனபதனல், தகராறு, மாச்சரியம், கிளர்ச்சி எழவில்லை.

இப்போது கிளம்பி இருப்பது, மொழி ஆதிக்கம் செய்கிறது, ஆட்சிமொழி என்ற நிலையில் என்பது அல்ல; ஆங்கிலம் மட்டுமல்ல ஆட்சிமொழி; பிரன்ச்சு மொழியும் ஆட்சிமொழி; — ஆகவே மொழி ஆதிக்கம் என்ற பேச்சுக்குப் பொருள் இல்லை. ஆனல் இப்போது எழுந்துள்ள பிரச்சினை, ஆங்கிலமொழியினரின் ஆதிக்கம் என்பதாகும். அதை விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் இருக்கும், நிச்சயமாக; ஆனல், முதலில், மொழிகாரணமாக, மாச்சரியம் எழாதபடி இந்த 200-ஆண்டுகளாக நடந்துகொள்ள முடிந்ததே, இருமொழிகளையும் ஆட்சிமொழிகள் என்று சட்டம் இயற்றியதன் மூலம், அந்த அரசியல் நுண்ணறிவுபற்றி, தம்பி! எண்ணிப்பார்!! நீயும் நானும் எண்ணிப்பார்த்துமட்டும் என்னபயன்? அங்கே போகிற லால்பகதூர் அல்லவா எண்ணிப்பார்க்கவேண்டும்.

இருநூறு ஆண்டுகள் எத்தனையோ இனிமையுடன், கனடியர், என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஊட்டி வளர்த்த பிறகும், இன்று கனடாவில் கிளம்பியுள்ள பிரன்ச்சு உணர்ச்சி பற்றி லால்பகதூர் கூர்ந்து கவனித்து தமது கட்சியினர் கொண்டுள்ள நோக்கத்தையும் போக்கையும் மாற்றிக்கொண்டாக வேண்டும் என்ற தெளிவான கருத்தினைப பெற வேண்டும். சென்றேன்! கண்டேன்! மெய்மறந்து நின்றேன்!! என்பதிலே என்ன பலன்? சென்றேன், கண்டேன், புதுக்கருத்து கிடைக்கப் பெற்றேன் என்றல், பயன் மெத்தவும் உண்டு.

தம்பி! அடுத்த கிழமை மீண்டும் க்யுபெக் சென்று பார்ப்போம்—நிலைமையை—நினைப்பினை.

அண்ணன்,

அண்ணாதுரை

8-ம் பக்கத் தொடர்ச்சி

'என்னோட மனக்கோட்டையை இடிக்க அவராலேயும் ஆகாது, வேறு எவராலேயும் ஆகாது.'

"இதோ இப்ப இடித்துப்போட்டுட்டாரே...சினிமாவிலே சேர்ந்தாலே சந்தோஷமா, பெருமையா உன்னைக் கொடுக்கச் சம்மதிப்பாரு உங்க அப்பாருன்னு நினைச்சே...நடக்கல்லியே..."

"சினிமாவிலே சேர்ந்துவிட்டா, வேளியப்பனுக்கு என்னைக் கட்டிக்கொடுகக எங்க அப்பா சம்மதிக்கமாட்டார் என்பது எனக்கு முன்னுலேயே தெரியும..."

"உங்க அப்பாவுடைய சுபாவம் தெரிந்திருந்தும், வேளியப்பனை சினிமாவிலே சேர்த்துவிட நீ எப்படிச் சம்மதித்தே..."

"ஏன் சம்மதிததேன்னு கேளு ...வேளியப்பனுக்கு. என்னைக் கொடுக்க அப்பாருசம்மதிப்பாரு. வியாபாரம் நல்லபடி செய்துகிட்டு இருக்கருன்; உள்ளூரோடு இருக்கிறுன்; நமக்கு ஏற்ற இடம், அடக்கமான இடம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தாரு. அப்பா தெரியுமேல்லோ. பிடிவாதம். பார்த்தேன். ஒரு தந்திரம் செய்தேன். அண்ணேன்! உன் குரல் பிரமாதமா இருக்குது, சினிமாவிலே சேர்ந்தா பெரிய ஆள் ஆயிடுவேன்னு தூபம்போட்டேன். வேளியப்பனுக்கும் அந்தப் பைத்தியம்போல இருக்குது சினிமாவிலே சேரவேணும என்கிற பைத்யம். நமகு யாரு சொக்கி சிபாரிசு செய்யஇருக்கருங்கன்னு சொல்லி வருத்தப்பட்டாரு. மீளுட்சிம்மா கவனமவந்தது. அந்த அம்மாவுக்குத் தூபம் போட்டேன்; பலித்துவிட்டுது..."

"பாரேன் உன்னோட தந்திரத்தை....."

"என்னோட காரியத்தை நானே தானே கவனித்தாகணும். உனக்குத்தான் அந்தத்துப்பு கிடையாதே. சினிமாவிலே சேர்த்துவிட்டா, அப்பா என்னை வேளியப்பனுக்குக் கொடுக்க மறுத்துவிடுவாரு என்பது தெரியும். அதுபோலத்தான் மறுததுவிட்டாரு. அதுமட்டுமா. வேளியப்பன் இங்கே பழக்கடை நடத்திக்கிட்டு இருக்கறவரைக்கும், உன்னோட கடை தூங்கிவடியும் என்பதும் புரிந்துபோச்சி. இப்ப! ஒரே கல்லிலே இரண்டு மாங்கா! பார்த்தயா சொக்கியோட வேலையை....."

"சொக்கி! சொக்கி! அப்படின்னு, உனக்கு என்னைக்கட்டிக் கொள்ளவேணும் என்கிற விருப்பம்....."

"எழுதி ஒட்டிக்கொள்ளவா நெற்றியிலே. பைத்யம்! பைத்யம! வியாபாரத்தைக் கவனி! பெத்தவங்க பெரியவங்க வந்து மததைக் கவனிப்பாங்க..."



தித்திக்கும் செய்தி!

'காஞ்சி'
ஆண்டு மலர்-1965.

தூலத் திங்களில் வருகிறது.

★

சுவையும் பயனும் மிக்க
கட்டுரைகள்,
கதைகள்,
கவிதைகள்.

★

எழுத்தாளர்கள் பலர் தீட்டிடும்
எண்ணற்ற எழுத்தோவியங்கள்.

இவற்றோடு

அண்ணு

அளித்திடும்
சிந்தனை விருந்துகள்.

★

கருத்துக் கருவூலமாக
கற்கண்டுக் குவியலாக
மலர் தயாராகிறது.

சின்ன காஞ்சிபுரம் 88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.